**In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Kilpennathur**
**DVC 22/2025**
**Chief Examination of RW3**

| | | |
|---|---|---|
| **Name** | : | Praveen Raj |
| Father **Name** | : | Raja |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Calling** | : | மருத்துவ அலுவலர், **ஆனானந்தல் ஆரம்ப சுகாதார நிலையம்** |
| **Religion** | : | |
| **Age** | : | **28** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 08.10.2025**

( எதிர்மனுதாரர் தரப்பில் மருத்துவ அலுவலர் ஆரம்ப சுகாதார நிலையம் அவர்களை மேற்படி மனுதாரர் குழந்தை கருவூற்றது சம்மந்தமாக ஆவணங்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு அனுமதிக்கப்பட்தன் பேரில் இன்று மருத்துவர் ஆஜராகி அவரின் முதல் விசாரணை )

**முதல் விசாரணை**

நான் ஆனானந்தல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அலுவலராக உள்ளேன். நான் வேலூர் அடுக்கம்பாறை மருத்துவகல்லூரியில் படித்து 2020ம் ஆண்டு மருத்துவ படிப்பு முடித்து பின்னர் வேட்டவலம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணி செய்து ஆனானந்தல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பு தான் பணியில் சேர்ந்தேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து துர்காதேவி என்கிற நபர் 2023ம் வருடம் அவர் கருவுற்றது சம்மந்தமாக ஏதேனும் சிகிச்சையை ஆரம்ப சுகாதார நிலையம் ஆனானந்தலில் எடுத்துக்கொண்டாரா என்ற விபரம் பற்றி ஆவணங்களை சமர்பிக்க பாதுகாப்பு அதிகாரியின் மூலமாக தெரிவிக்கப்பட்டது அதன் பேரில் நான் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். இவ்வழக்கின் மனுதாரர் துர்காதேவி எங்கள் ஆனானந்தல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வந்தாரா என்றால் வந்தார். Antenatal Clinic Register பதிவேட்டில் 25.12.2023ல் துர்காதேவியின் கணவர் பெயர் கண்ணியப்பன் என்றும் வயது 26 என்றும் கரிப்பூர் புது தெரு என்றும் உள்ளது. 25.07.2023ல் பரிசோதனைக்கு வந்தபோது 28 வாரமும், 22.08.2023 அன்று 32 வாரம் கருவுற்றதாகவும் உள்ளது. மேற்படி Antenatal Clinic Register – RCHI ID (Reproductive and Child

Health ID) எண் 133010333852 ஆகிய குறிப்புகள் அசலுடன் ஒப்பீடு செய்யபட்டது. அது **எமசாஆ9** ஆகும். ஆனானந்தல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அருகில கரிப்பூர் கிராமம் உள்ளது. கரிப்பூர் கிராமத்தில் உள்ளவர்களும் மகப்பேறு சம்மந்தமாக ஆனானந்தல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வருவார்கள்.

**குறுக்கு விசாரணை**

மேற்படி எமாசஆ9 ஆவணத்தை என்னால் எழுதப்பட்டது அல்ல என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் உள்ள துர்காதேவி என்பவர் மனுதாரர் தான் என்று என்னால் சொல்ல இயலாது என்றால் சரிதான். எமாசஆ9 பதிவை மட்டும் வைத்து மேற்படி சிகிச்சைக்கான மொத்த விபரங்களையும் சொல்ல முடியாது என்றால் இரண்டு முறை மேற்படி ஆவணத்தில் குறிபிட்டுள்ள நபர் வந்ததை மட்டும் தான் சொல்ல முடியும். மேற்படி நபரின் அடையாள குறிப்புகளோ அல்லது புகைப்படங்களோ ஏதேனும் மேற்படி ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான். அதேபோன்று மேற்படி ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள நபரின் ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டை ஆகியவை ஏதும் பெற்று எங்களுடைய பொறுப்பில் ஏதும் இல்லை என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்